(5) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது வளவுகள் (அனுமதியின்றி குடியிருப்போர்களை வெளியேற்றுதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 29/1.

(பிற்பகல் 4-30)

3. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) 1975 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 47/1975).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) சட்ட முன் வடிவு @ (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 47/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 47/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

திரு. எஸ். ஏ. இராசமாணிக்கம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, கோவை நகராட்சி மன்றத்தை மாநகராட்சி ஆக்குவதற்காக தனி அதிகாரி ஒருவர் போடப்பட்டிருப்பதை மனதார நான் வரவேற்கிறேன். அதற்காக அரசாங்கத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கின்றேன். கூடியவிரைவில் அது மாநகராட்சியாக இயங்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று அரசிடம் வற்புறுத்திக்கூற விரும்பு கிறேன். மாநகராட்சி ஏற்பட்ட பிறகு, அதிலே புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளில் எவையெவை வரி செலுத்தக்கூடிய பகுதிகள், எவையெவை வரி செலுத்த முடியாமல் கிளர்ச்சிகள் செய்யக்கூடிய பகுதிகள் என்பதை

@ 272–273ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

இப்போதே கண்டறிந்து, வரி செலுத்தக்கூடிய பகுதிகளை மாத்திரம் மாநக ராட்சியோடு இணைப்பது நலமாக இருக்கும். இதைக் கவனத்திலே கொண்டு புதிய பகுதிகளைச் சேர்க்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். அதுபோலவே அபிவிருத்தி செய்யக்கூடிய நிலையிலேயும், நாம் முதலில் சுற்றுப்புற கிராமங் களைத்தான் முதலில் அபிவிருத்தி செய்யப் போகின்றோம். அபிவிருத்தி செய் கின்ற நேரத்தில், உடனடியாக அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற எண்ணத் தில் அவசரப்பட்டால், எல்லோரும் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்துவிடுவார்கள். அந்த சமயத்தில், எந்த நோக்கத்திற்காக நாம் மாநகராட்சியாக மாற்று கிறோமோ அது நிறைவேறாது. எனவே, படிப்படியாக நாம் அபிவிருத்தி செய்யவேண்டும். எந்தெந்தப் பகுதிகள் உடனடியாக அபிவிருத்தி செய்யப் படவேண்டுமோ அவைகளை முதலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். இப்பொழுது கோவை நகராட்சியின் எல்லை 9 சதுர மைல் அளவுக்கு இருக்கிறது. இப்போது போடப்பட்டிருக்கும் எல்லையின் பரப் பளவு கிட்டத்தட்ட 47 சதுர மைல் என்ற அளவிலே இருக்கிறது. அந்த அளவுக்கு மாநகராட்சியின் எல்லையை விஸ்தரிக்க இருக்கிறோம். எனவே, இதிலிருந்து சில பகுதிகளை நீக்கிவிட்டு, குறைந்த அளவு பரப்பளவை ஏற் படுத்தி, அதற்கான பகுதிகளைச் சேர்த்து, மாநகராட்சியாக்க ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மேலவைத் துணைத் தலைவா வர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் அவர்கள் சொல்லி யுள்ள கருத்துக்கள் ஏற்கெனவே மாநகராட்சி ஆக்குவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் ஆலோசனையில் இருக்கிறது. அவர்கள் முடிவு எடுக்கும்போது இந்தக் கருத்துக்களையெல்லாம் நல்ல முறையில் கவனமாக ஆராய்ந்து முடிவெடுப்பார் களென்று தெரிவித்துக்கொண்டு, இந்த மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட வேண்டும்"

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1975) நிறை ஏன்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1975) நிறை வேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1975.)

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவா வர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

@ 273—275 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.